# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## கர்த்தரின் நாமம் பலத்த துருகம் நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்"

நீதி-18:10

செய்தி மலர்
2019
அக்டோபர்

இதழ் : 06
மலர் : 16



# சபை ஊழியரிடம் இருந்து

கிறிஸ்துவிற்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும் அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த செப்டெம்பர் மாதம் முழுவதும் நம்மை கண்மனி போல வழி நடத்தின தேவன் வரும் அக்டோபர் மாதத்திலும் நம்கூட இருந்து நமது திருச்சபையை சகல ஆசீர்வாதங்களையும் தந்து திருப்திபடுத்தி வழி நடத்துவாராக.

" உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான்" (சங்கீ–91–1) என்ற வசனத்தின் படி உன்னதமானவருடைய மறைவும் நிழலும் ஒன்றே நமக்கு நிரந்தர பாதுகாப்பை இந்த உலகத்தில் நமக்கு தர வல்லது.

"வேதம் கூறுகிறது கர்த்தரின் நாமம் பலத்த துருகம் நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்" (நீதி–18:10)

உன்னதமானவருடைய மறைவு நமக்கு எப்படியெல்லாம் பாதுகாப்பை தருகிறது என்பதை கீழ்வரும் பகுதிகளில் விளக்கமாக காணலாம்.

## 1. நாசமோசங்கள் அணுகாமல் பாதுகாக்கிறார்...

இந்த உலகில் எத்தனையோ ஆபத்துகள் நம்மை சூழந்திருக்கிறது. பல்வேறு நோய்களால் வரும் ஆபத்துகள் மனிதர்களால் நேரிடும் துரோகங்கள், வறுமை தரும் உபத்திரவங்கள், எதிர்பாராமல் ஏற்படும் விபத்துகள், கலவரங்கள், போர்கள், போராட்டங்கள், நமக்கு அருமையானவர்களின் திடீர் மரணம் இவைகளெல்லாம் நம்மை நிலைகுலையச் செய்கிறது.

ஆனால் வேதம் கூறுகிறது "இரவில் உண்டாகும் பயங்கரத்திற்கும், பகலில் பறக்கும் அம்புக்கும் இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும் மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்திற்கும் பயப்படாதிருப்பாய். உன் பக்கத்தில் ஆயிரம் பேரும்,உனது வலது புறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும் அது உன்னை அணுகாது. உன் கண்களால் மாத்திரம் நீ பார்த்து துன் மார்க்கருக்கு வரும் பலனை காண்பாய். உன்னதமான கர்த்தரே உனக்கு தாபரம். ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது. வாதை உன் கூடாரத்தை அணுகாது என்று (சங்கீ–91:5–10)

தேவனுடைய நிழலை அண்டி வாழ்ந்த யோசேப்புக்கு எத்தனையோ போராட்டங்கள் வந்தது. சொந்த சகோதரர்களே அவனை படுகுழியில் தள்ளினார்கள்.

அடிமையாக விற்றுப் போட்டார்கள்.தங்கள் தந்தையிடம் யோசேப்பு செத்துவிட்டான் என்று நா கூசாமால் பொய் சொன்னார்கள். அடிமையாய் சென்ற இடத்தில் எஜமானின் மனைவி கொடுத்த பொய் புகாரின் நிமித்தமாக கொடுஞ்சிறையில் அடைக்கப்பட்டான். ஆனால் எல்லா இடங்களிலும் கர்த்தரின் நிழல் அவனைக் காத்துக்கொண்டது. அடிமையாய் பணி செய்த வீடு அவனால் ஆசீர்வதிக்கப்பட்டது. அவன் அடைக்கப்பட்டிருந்த சிறைச் சாலையில் மேன்மை பெற்றான். தேவ தரிசனங்களும் வரங்களும் தொடர்ந்து கிரியை செய்தது.

ஒரு நாள் அந்நாட்டு அரசனின் சொப்பனத்தின் மறை பொருளை அவன் தேவ ஞானத்தினால் விளக்கி சொன்னதாலே அந்நாட்டு அதிபதியாக பதவி உயர்வு பெற்றான். அல்லேலூயா. அதேவிதமாக ஆண்டவருடைய நிழலை அண்டி வாழ்கிற உங்களையும் கர்த்தர் ஆசீர்வதிப்பார். ஏற்ற சமயத்தில் உங்களை உயர்த்துவார்.

## 2.சாத்தானின் சதி சர்ப்பனைகளை அழித்துப் போடுகிறார் . . .

நம் கண்களுக்கு தெரியாமல் அநேக அசுத்த ஆவிகள் நம்மை விரோதிப்பவர்களுக்குள் புகுந்து கொண்டு நமக்கு தீங்கிழைக்க முயற்சி செய்யும். ஆனால் கர்த்தரோ பிசாசின் கிரியைகளை எதிர்த்து அழித்து வெற்றி சிறக்க நமக்கு பெலன் தருகிறார். "சிங்கத்தின் மேலும், விரியன் பாம்பின் மேலும் நீ நடந்து பால சிங்கத்தையும், வலு சர்ப்பத்தையும் நீ மிதித்து போடுவாய். அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கு தப்புவிப்பார்"(சங்கீ-91:3,13) "யாக்கோபுவுக்கு விரோதமான மந்திரவாதமில்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறி சொல்லுதலுமில்லை" (எண்-23:23)

"இதோ சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும் சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன் ஒன்றும் உங்களை சேதப்படுத்தமாட்டாது"(லூக்-10:19) தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள் ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி சுற்றித் திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்.
(1-பேது-5:8,9)தேவனுக்கு கீழ்படிந்திருங்கள் பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப் போவான் (யாக்-4:7)

"என் நாமத்தினாலே பிசாசுகளை துரத்துவார்கள்" (மாற்கு-16:17)

பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் நமக்குத் தருகிறார். அவைகள் என்னவென்றால் சத்தியம் எனும் கச்சை, நீதி என்னும் மார்க்கவசம், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை,பொல்லாங்கன் எய்யும் அக்கினியஸ்திரங்கள் எல்லாம் அவித்துப் போட விசுவாசம் என்னும் கேடகம், இரட்சண்யம் எனும் தலைச்சீரா, தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம், ஆவியின் ஜெபம் இவைகளையெல்லாம் கைக்கொள்ளுகின்றபொழுது தேவனுடைய நிழல் நம்மை காத்துக்கொள்ளுகிறது. எல்லா துரைத்தனங்களையும், அதிகாரங்களையும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளையும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவியின் சேனைகளையும் மேற்கொண்டு போராடி அழிக்க நமக்கு அதிகாரம் கிடைக்கிறது.

உலகத்தை ஜெயித்தவர் நமக்கு மறைவாகவும் நிழலாகவும் இருக்கிறபடியால் நாமும் இந்த உலகத்தின் உபத்திரவங்களை வென்று ஜெயம் எடுப்போம் என்பது நிச்சயம். (யோவா-16:33)

## 3.தூதர்களை நமக்கு பாதுகாப்பாக தருகிறார் ...

கண்களுக்கு புலப்படாத மறைவான தீங்குளிலிருந்து நம்மை பாதுகாப்பதற்காக தேவ தூதர்களை நமக்கு பணிவிடை செய்யும் ஆவிகளாக தேவன் தருகிறார். மனிதர்கள் வடிவிலே சில நேரங்களில் தூதர்களை அனுப்பவுதுண்டு.
"உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி உனக்காக தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார். உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னை தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள்" (சங்கீ-91:11,12)

சனகெரிப் என்ற அசீரிய ராஜா எசேக்கியா என்ற யூத ராஜாவை அழிக்கும்படி வந்த போது சேனைகளின் தேவனாகிய கர்த்தரை இகழ்ந்து பேசினான். என்ன நடந்தது தெரியுமா? அன்று இராத்திரியில் கர்த்தருடைய தூதன் புறப்பட்டு அசீரியரின் பாளயத்தில் 1,85,000
பேரை சங்கரித்தான். அதிகாலமே எழுந்திருக்கும் போது இதோ அவர்கள் எல்லாரும் செத்த பிரேதங்களாக கிடந்தார்கள்(2-ராஜா-19:35). ஆம் தேவனுடைய பிள்ளைகளுக்கு எப்போதெல்லாம் ஆபத்து நேரிடுகிறதோ

அவர்கள் கூப்பிடுகின்றபொழுது தேவன் தமது சேனையின் தூதனாகிய மிகாவேலையும் அவனோடு கூட கோடானுகோடி தூதர்களையும் அனுப்புகிறார். அவர்கள் வந்து பிசாசின் சேனையையும் அவனுடைய பிரயத்தனங்களையும் அழித்துப் போடுகிறார்கள்.

"அவன் என்னை நோக்கி கூப்பிடுவான் நான் அவனுக்கு மறு உத்தரவு அருளிச் செய்வேன் ஆபத்தில் நானே அவனோடிருந்து அவனை தப்புவித்து அவனை கனப்படுத்துவேன். (சங்கீ91:15) ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு நான் உன்னை விடுவிப்பேன் நீ என்னை மகிமை படுத்துவாய். (சங்கீ-50:15)

ஒரு முறை பாலாக் என்ற மோவாபிய அரசன் இஸ்ரவேல் ஜனங்களை சபிக்கும்படி பிலேயாம் என்ற தீர்க்க தரிசியை அழைத்து வரச்சொன்னான். அப்படி அவன் வருகிற வழியில் கர்த்தருடைய தூதனானவர் உருவிய பட்டயத்தோடு பிலேயாமை வழி மறித்து இஸ்ரவேல் ஜனங்களை சபிக்காதபடி எச்சரித்தார். அப்பொழுது பிலேயாம் கர்த்தருடைய தூதனை நோக்கி நான் பாவம் செய்தேன் வழியிலே நீர் எனக்கு எதிராக நிற்கிறதை அறியாதிருந்தேன். இப்பொழுதும் உம் பார்வைக்கு இது தகாததாய் இருக்குமானால் நான் திரும்பிப் போய் விடுகிறேன் என்றான். (எண்-22:34)அதன் பிறகு பிலேயாம் தேவ தூதனின் கட்டளையின் படி இஸ்ரவேல் ஜனங்களை மூன்று முறை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்தான்.

இதே போல தேவ மனிதர்களாகிய ஆபிரகாம், சகரியா, மனோவா, கிதியோன், ஏசாயா, மரியாள் போன்ற அநேகருக்கு தேவ தூதர்கள் மூலமாக பல மகத்துவமான காரியங்களை ஆண்டவர் வெளிப்படுத்தி அநேக அற்புதங்களை செய்திருக்கிறார்.

கர்த்தர் தாமே உங்கள் அனைவருக்கும் மறைவும், நிழலுமாக தங்கியிருந்து இந்த மாதம் முழுவதும் தீமைகளுக்கு விலக்கி சாத்தானை வென்று ஜெயத்தைக் கொடுத்து தூதர்களை கொண்டு பணிவிடைகளை செய்து கிருபையாய் வழி நடத்துவாராக.

இப்படிக்கு
கர்த்தரின் பணியில்,
அன்பு சகோதரன்,
எ.ஸ்டாலின்

## 2019 செப்டம்பர் மாத வேத வினாவுக்கு பதில்

1. பெல்ஷாத்சார் – தானியேல்–5: 1–5

2. தானியேல்– தானியேல் –7: 1

3. பெல்ஷாத்சார் – தானியேல்–5:1–3

4. தானியேல், அனனியா, மீஷாவேல்,அசரிய – தானியேல் –1: 11–14

5. நேபுகாத்நேச்சார்– தானியேல் –2:46

6. தானியேல் – தானியேல் –12:5,6

7. பெல்ஷாத்சார் – தானியேல்–5:12

8. தானியேல் – தானியேல் –7:2–4

9. தானியேல் – தானியேல் –10:4–8

10. நேபுகாத்நேச்சார் – தானியேல் –4:37

11. எரிகிற அக்கினிச் சூளையில் – தானியேல் –3:24,25

12. தானியேல் – தானியேல் –6:10

13. தானியேல்–11:27

14. தானியேலுக்கு– தானியேல் –10:12–19

15. தானியேல் – தானியேல் -9:1-11

### 2019 செப்டம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. பிரிசில்லா செங்குட்டுவன்
Sis. ஜீவி பாக்கியவதி வேதானந்தம்
Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. பத்மினி வர்கீஸ்
Sis. ஹெலன் ராபின்
Sis. ஷாந்தி
Sis.எழில் அரசி

## தேவ செய்தி

**இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது (வெளி 21:3)**

நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள் சொல்லி இந்த செய்தி மலர் செய்தியின் மூலமாக நமது சபையாரை சந்திப்பதில் மகழ்ச்சி அடைகிறேன்.

நம்முடைய தேவனாகிய கர்த்தர் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் எல்லாம் நல்லது என்று கண்டார். ஆனால் தேவனுக்கு ஒரு வாஞ்சை இருந்தது. அது என்னவென்றால் நாம் (தேவன்) பழகுவதற்கும், பேசுவதற்கும், சம்பாஷனை செய்யவும் ஒன்றுமில்லை என்று கண்டு, தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அவனை தேவ சாயலகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்

(ஆதி 1:27).

தேவனாகிய கர்த்தர் அவர்கள் வாழ்வதற்க்கு என்று ஏதேன் தோட்டத்தை உண்டாக்கி அதிலே அவர்கள் வாழும் படியாக அதை பண்படுத்தவும், காக்கவும் வைத்தார். அல்லாமல் தேவன் அவர்களோடு பேசும்படியாகவும் அவர்கள் தேவனோடு பேசும்படியாகவும் ஒரு ஐக்கியத்தை வைத்துக் கொண்டு இருந்தார். அது நிலையாக இருக்கும்படியாக விரும்பி கட்டளை கொடுத்தார்.

அதை அவர்கள் மீறும் போது மீறின போது அவர்கள் தேவனுக்கும் மனிதர்களுக்கும் உள்ள ஐக்கியம் சற்று தூரமாகிற்று. அதனால் அவர்கள் கண் தேவனை காணக்கூடாமல் போயிற்று. ஆனாலும் அவர்கள் தேவனுடைய சத்தத்தை கேட்டார்கள். இப்படித்தான் ஆதிமனிதர்கள் தேவனை விட்டு விலகி தூரமானார்கள் ஆனால் தேவன் அவர்களை அப்படியே விட்டு விடாமல் மீண்டும் நம்மோடு சேர்த்துக் கொள்ளும் படியாக விரும்பி தானாகவே தேவன் ஒரு வழியை உண்டு பண்ணினார், அதனால்தான்

"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். (யோவான் 3:16,17 )

அதனால்தான் நம் தேவன் எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்க்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியாகவும் சகல அதிகாரத்திற்க்கும் அவர் அதிகாரமுள்ளவராயும் இருக்கிறார்.

அதனால் அவர்தாமே தானாகவே பூமியில் வந்து (அல்லது) மனித சாயலாகவே பூமியில் வந்து நம்மை போலவே ஒருவராக என்னப்பட்டார். அவர் தேவ குமாரன் ஆனால் மனுஷ குமாரன் என்று அழைக்கப்பட்டார். அதில் அவர் விருப்பமுள்ளவராகவும் ஆசையுள்ளவராகவும் இருந்தார். அதனால்தான் மனுஷர்மேல் பிரியம் வைத்தார், மனுகுளத்திற்க்காகவே தன் ஜீவனையும் கொடுத்தார். சகல அதிகாரம் உள்ளவராய் அவர் இருந்தபடியால் தன் ஜீவனை அவர் மீண்டும் எடுத்துக் கொண்டார் (அல்லது) உயிர்தெழுந்தார். அவர் இருக்கிறராகவே இருக்கிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிருஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராகவே இருக்கிறார்.

இந்த தேவன்தான் நம்மை "மனஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்கலையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்." (அப்போ. 17:26).

எதற்க்காக அவர் அப்படி செய்தார் என்றால் கர்த்தராகிய தம்மை அவர்கள் (மறை ஜாதிகள்) தடவியாகிலும் கண்டுபிடிக்கத் தக்கதாகியும் தம்மை தேடும்படியாக அப்படி செய்தார். அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவோ. அதனால் அவர் சமீபமாக இருக்கிற காலம் கிருபையின் காலத்தில் அவரை நோக்கி கூப்பிடுகிற யாவருக்கும் உதவி செய்ய வல்லமையுள்ளவாராய் இருக்கிறார்.

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னித்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்தேயு 11:28)

என்று அழைக்கிறார். அவரிடத்தில் வருகிற யாவரையும் சேர்த்துக் கொள்வார்.

இழந்து போனதை தேடவும், இரட்சிக்கவுமே இயேசு கிறிஸ்து உலகத்தில் வந்தார். எதை அவர் இழந்தார். மனிதனோடுள்ள தொடர்பை அதனால்தான் மனிதர்கள் மேல் பிரியம் வைத்தார். மனிதன் பாவத்தில் இருந்து மீண்டும் நம்மோடு இனைத்துக் கொள்வார். அவர் உன்மை உள்ளவராகவே இருக்கிறார். அதற்க்காகவே உலகத்தில் வந்தார், அதற்க்கான எல்லாவற்றை சிலுவைறில் செய்து முடித்தார். ஒன்றை மட்டும் நம்மை கேட்கிறார்.

"நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும் படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். அவர்கள் (நாம்) இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்" (யோவான் 1:12,13) என்று தேவனே நம்மை ஏற்றுக் கொள்கிறார்.

இந்த உலகத்திலே நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அங்கிகரிக்கப் பட்டு தேவனோடு இழந்த தொடர்பை மீண்டும் இனைக்கப்பட்டு நாம் புதிய மனுஷர்களாக மாறுகிறோம். இந்த மாற்றத்தை தான் தேவன் எதிர்பாக்கிறார். இதற்க்காகவே நாம் உலகத்தில் உயிர் வாழ்வதற்க்கு தேவன் நம்மை அனுமதிக்கிறார். ஜீவனை கொடுக்கிறார் மெய்யாகவே இதை விசுவாசிக்கிற நாம் அவரோடு இணைத்துக் கொண்டால் உங்கள் வாழ்க்கை மாறும். நாம் தேவனோடு இருந்தால் தேவனுக்கு உடையது எல்லாவற்றிலும் நமக்கு பங்கு உண்டு, காரனம் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற சுதந்திரத்தை உடையவராகவே இருக்கிறோம்.

நம் தேவன் சகலத்தையும் படைத்தவர். நம் கண்கள் காண்கிறது, நம் கண்கள் காணாதவைகள் என்று பல காரியம் உண்டு அனைத்திலும் நம்மை பங்கு உள்ளவர்களாக நம்மை மாற்ற அவர் ஆசையுள்ளவராக இருக்கிறார். நாம் அவரோடு இனைக்கப்பட்டால் அவர் நம்மோடு இனைந்து எப்பொழுதும் தேவ சாயலாக மாறி நாம் அதற்க்கு ஒப்புக் கொடுப்போம் தேவ ஆசீர்வாதம் பெறுவோம்.

கர்த்தரின் பணியில்,
சகோதரர். பால் ஜெகன்நாதன்

**" உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்.**

**(ஏசாயா – 44:3)**

செல்வி. ஷலோம் கிரேஸ் ஆமோஸ்
செல்வி. கீதா கொம்மையன்
செல்வி. ரியா பிரிட்டி
செல்வி. வைதேகி கலிய மூர்த்தி
செல்வி. லின்டா வில்கின்ஸ்
செல்வி. பிரியங்கா சதிஷ்குமார்

செல்வன். ஜோசப் அருள் செல்வன்
செல்வன். சாலமோன் இமானுவேல்
செல்வன். ஜீவன் அஷ்வா
செல்வன். ஜோசுவா ராமர்
செல்வன். பெனின் லிடோ பாபு
செல்வன். ஆதித் சிங்
செல்வன். ஹனிஷ் தினேஷ் குமார்
செல்வன். ஏட்ரியல் ஆதான் ராஜேஷ்
செல்வன். ரோஷன் அசோக் குமார்
செல்வன். தினேஷ் குமார் ஜெயசீலன்
செல்வன். ஷியாம் சுந்தர்
செல்வன். ஶ்ரீதர் அல்போன்ஸ்
செல்வன்.இபின் கெட்சில் ஜெயகுமார்

சகோதரி.லின் டாஃப்னி ஜெபசிங்

சகோதரி. ஜீவரத்தினம் மஹேஷ் ராஜ்
சகோதரி. ஜான்ஸி அற்புதராஜ்
சகோதரி. தமிழ்ச்செல்வி ஞானசேகரன்
சகோதரி. அனிஷா ஆல்வின்
சகோதரி.ஆஷா பாலகிருஷ்ணன்
சகோதரி. ஜெபராணி விபின்
சகோதரி. மரகதம் ஸ்டீபன்
சகோதரி. பியூலா ஜெகன்நாதன்

சகோ. ஞான ஜெப சிங்
சகோ. சுஜின் ஹெக்கல்
சகோ. சுப்ரமணி கோவிந்தராஜீலு
சகோ. ஸ்டாலின் சுனில் வின்ஸ்
சகோ. வர்கீஸ்
சகோ. மார்க் ஆன்டனி மாஸ்கிறேனஸ்
சகோ. ஜெயகுமார் ஞானதாஸ்
சகோ.ராஜேஷ்
சகோ.தம்புகுமார் டென்னிஸ்
சகோ.வில்கின்ஸ் தினகரன்
சகோ.ஆஸ்டின்
சகோ.தினேஷ் அருள்மணி
சகோ.விஜய் இமானுவேல்

## இனிய பிறந்தநாள் மற்றும் திருமணநாள் நல் வாழ்த்துக்கள்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி & திரு. குமாரசாமி

திருமதி & திரு. விபின்

திருமதி & திரு. செங்குட்டுவன்

திருமதி & திரு. மேஷாக் சைமன்

திருமதி & திரு. வேதானந்தம்

# 2019 அக்டோபர் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/10/2019 | சகோ. பிராங்கிளின் | சகோ.பிரசாத் |
| 13/10/2019 | சகோ.சுகுமார் | சகோ. தாமஸ் |
| 20/10/2019 | பாஸ்டர். ஆல்வின் ஜெபா | |
| 27/10/2019 | பாஸ்டர். ஆல்வின் ஜெபா | |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04/10/2019 | சகோ. வில்சன் | சகோ. கிஸ்டோபர் தேவராஜ் |
| 11/10/2019 | சகோ. ஜெயசேகர் | சகோ. ஆரோகியதாஸ் |
| 18/10/2019 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 25/10/2019 | பாஸ்டர். ஆல்வின் ஜெபா | |

**முழு இரவு ஜெபம்**
10/10/2019 (இடம் பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி)
(நேரம் இரவு 10:00 மணி முதல் அதிகாலை 2:00 மணி வரை)

**பொதுமன்ற கூடுகை**
11/10/2019(இடம் –ஜெப வீடு ஃபாஹீல் )
(ஆலய ஆராதனைக்கு பிறகு)

**25/10/2019 வாலிப ஐக்கிய கூடுகை**
நேரம் 6:30 வழ 8:30 (இடம் : ஜெப வீடு ஃபாஹீல் )
(வேத வினா பகுதி லேவியராகமம் புத்தகத்தில் இருந்து கேள்விகள் கேட்கப்படும் )

**சகோதரிகள் ஐக்கிய கூடுகை**
26/10/2019 (இடம் –ஜெப வீடு ஃபாஹீல் )
(நேரம் மாலை 6:30 மணி முதல் இரவு 8:30 மணி வரை )
நிகழ்ச்சி **Sponser** சகோதரி.பாக்கியா ரவிஜாண் அவர்கள்
(வேத வினா போட்டி இல்லை)

# கிளாடிஸ் அயில்வார்டு (1904–1970)

ஒரு சாதாரண வீட்டு பணிப்பெண் மிஷனெரியாக மாற முடியுமா? படிப்பில் பின் தங்கியதால் ஒரு வேலைக்காரியாக பணிபுரிந்த கிளாடிஸ் எப்படி ஒரு மிஷனெரியாக சீனா தேசத்துக்கு சுவிசேஷத்தை எடுத்துச்சென்றாள் என்பது மிகவும் சுவாராசியமான மற்று சவாலான ஒன்று.

புதிய ஆண்டிற்குள் செல்லும் அகமதி தமிழ் திருச்சபை ஆயிரமாய் பெருக வேண்டும். அதிசயங்கள் காணவேண்டும் கிறிஸ்துவின் நாமம் எங்கும் சொல்ல வேண்டும் உம்முடைய இராஜ்யம் எங்கள் சபையின் மூலம் இம்மண்ணில் வரவேண்டும் என வாழ்த்துகிறேன்.

நல்ல மரம் நல்ல கனிகளை கொடுக்கும், கெட்ட மரம் கிறிஸ்து விரும்பாத கனிகளை தரும் நாம் எப்படிப்பட்ட மரமாக இருக்க வேண்டும் என்றும் இருக்ககூடாது என்று தேவன் நம்மில் எதிர்பார்க்கின்றார்.

பட்ட மரம்: இது இலை உதிர்ந்தது கனியற்றது இரண்டு தரம் செத்து வேரற்று போன பட்டமரம் ஏன் இந்த மரம் இந்நிலைக்குள்ளானது என்று யூதா 12–ம் வசனத்தில் கூறுகிறார். காயினுடைய வழியை தெரிந்துக்கொண்டவர்கள் பிலேயாம் கூலிக்காக செய்த வஞ்சகத்தில் விரைந்தோடியவர்கள். கோரா எதிர்த்து பேசின பாவத்துக்கு உள்ளாகி கெட்டு போனவர்கள் தங்களைத் தங்களே மேய்த்துக்கொண்டவர்கள்.

கனியற்ற மரம்: இலைகள் நிறைந்த ஒரு அத்திமரத்தைக் கிறிஸ்து தூரத்திலே கண்டு அதில் ஏதாகிலும் அகப்படுமா? என்று பார்க்க வந்தார் (மாற்கு–11:13) அதிலே இலைகளையல்லாமல் வேறொன்றையும் காணவில்லை, கனியற்ற, சாட்சியற்ற பெயர் கிறிஸ்தவர்களே இவர்கள் தேவையுள்ள மனிதனைக் கண்டு பக்கமாய் விலகி சென்ற ஆசாரியன், லேவியன் போன்ற இவர்கள் கிறிஸ்துவின் வாசனையை அறவே அற்றவர்கள்.

முள் செடிகளால் நெருக்கப்பட்டமரம்: உலக கவலை ஐசுவரியத்தின் மயக்கம் போன்ற முட்செடிகள் (மத்–13:22) நம்மில் வளர இடமளித்தால் அவை வளர்ந்து நம் வாழ்க்கையையே நெருக்கி அழித்து போடுகிறது.

**கற்பாறையில் வேரற்ற மரம்:** வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டான உடனே, இவர்கள் கிறிஸ்துவில் வேர்விடாதபடி (மத்-13:21) உலகில் மட்டும் வேர்கள் பற்றி பிடித்து இருந்தால் தண்ணீர் இல்லாத பட்டமரமாயிற்று. கோடாரியானது மரத்தின் வேர் அருகே வைக்கப்பட்டிருக்கின்றது. கனி கொடாத கொடிகளை அறுத்துப்போடுவார். கர்த்தருடைய சமூகத்திலிருந்து விலகி ஓடிய யோனாவினால்தான் கடலில் கொந்தளிப்பும், கப்பலில் கலக்கமும் கூக்குரல் ஏற்பட்டது. யோனா, சிம்சோன் போன்ற பொறுப்பற்ற கிறிஸ்தவர்களால் நாடே கொந்தளித்து கதறுகிறது. பொறுப்பற்ற நிலையிலிருந்து நாம் மாறியாக வேண்டும். இல்லையென்றால் நமக்கும் சிம்சோனின் முடிவு காத்து இருக்கிறது.

**கசப்பான மரம்:** நல்ல திராட்சை பழங்களை தருமென்று நான் காத்திருக்க, அது கசப்பான விஷம் நிறைந்த பழமரங்களால் நிறைந்து விட்டது. கலா:5:19-ல் கூறியபடி விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகராதனை, பில்லி சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டங்கள் போன்ற கசப்பான களைகள் நிறைந்த கனிகளைத் தரும் மரங்களே கிறிஸ்தவர்களுக்குள் மலிந்து காணப்படுகிறது.

**நற்கனிகள் நிறைந்த மரம்:** திருச்சபை ஒரு பழத்தோட்டம் அது கனிமரங்கள் நிறைந்த ஏதேன் தோட்டம் போன்றது. நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் வாசனையை வெளிப்படுத்தும் நற்கந்தமாயும், நடமாடும் நிருபமாயும், சுவையான கனி தரும் மரங்களாயும் வாழ்கிறோம். நம்மில் விதைந்திருக்கும் ஒவ்வொரு பழத்திற்குள்ளும் அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் போன்ற சுவைதரும் சுளைகள் நிறைந்துள்ளன. (கலா-5:21) தேவன் நம்மை நற்கனிதரும் மரமாக நியமித்துள்ளார். தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரண சித்தமும் இதுவே.

**ஒட்டுமரம்:** காட்டொலிவ மரக்கிளையாகிய நம்மை வெட்டி எடுத்து, உயர்ந்த ஒலிவ மரமாகிய தன்னில் ஒட்டவைத்துக் கொண்டாரே, ஆம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் சிலுவை மரத்தில் கிறிஸ்து இயேசு மனிதனை தன்னோடு இனைத்துக் கொண்டார். சிலுவையிலே நம் பாவத்திற்கு மரித்து உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்குள்ளே பிறந்தவர்களே, கிறிஸ்துவின் இரத்தத்தில் நமது வேர் பலமாக ஊன்றப்பட்டு, ஜீவ அப்பம் நானே என்று கூறிய கிறிஸ்து நமக்கு தம்மை உரமாகவும் ஆக்கிக்கொண்டார்.

கர்த்தரின் பணியில்,

**S.சுகுமாரன்**

# 2019 அக்டோபர் மாதத்திற்கான வேத வினா!

1. கர்த்தர் ஏதோமியருக்கு எதிரான செய்த காரியங்கள் எவை?
2. கர்த்தர் ஆசாரியர்களை பார்த்து கேட்பது என்ன?
3. கர்த்தர் அங்கீகரிக்காத காரியம் எது? யாரெல்லாம் சபிக்கபட்டவர்கள்?
4. கர்த்தரின் உடண்படிக்கை என்ன?
5. யார் கர்த்தருடைய தூதன்?
6. எவர்களை கர்த்தர் சங்கரிப்பார்?
7. எதற்காக ஆவியைக்குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும்?
8. எந்த காணிக்கை கர்த்தருக்கு பிரியமாயிருக்கும்?
9. யாருக்கெல்லாம் ஞாபகபுஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது?
10. எதற்கு முன்னே எலியா வருகிறார்?

விடைகளை வருகின்ற 20-10-2019 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.. அல்லது விடைகளை (Whatapp # Seithi malar ATC 66015503 என்ற குரூப்பில் அனுப்பவும்) விடைகளை வேதாகமத்தில் மல்கியா அதிகாரங்களில் இருந்து பதிலைத் தேடுங்கள் )

(குறிப்பு) செயற்குழு உறுப்பினர் அல்லாது மற்றவர்களிடம் விடைத்தாள் கொடுக்கும்பட்சத்தில் ..அந்த விடைத்ததாளுக்கு செய்திமலர் பொறுப்பாளர் பொறுப்பல்ல,

## தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – –

மத்தேயு 7:7

## வாலிபர் பகுதி

. . . "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது" . . . (மத்தேயு 6:24)

கிறிஸ்த்துவுக்குள் அன்பான சகோதரனே, சகோதரியே! உங்கள் யாவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் என் அன்பின் வாழ்த்துகள்!!!

வாலிப சகோதர, சகோதரியே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சுவிசேஷ வாக்கியத்தில் ஒரு காரியத்தை இப்படியாக கூறுகிறார்.

"இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது. ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பேன் அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டை பண்ணுவான், "தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது" (மத்தேயு 6:24)

யார் இந்த இரண்டு எஜமான்கள்?

1.நன்மைக்கு எஜமானன் இயேசு கிறிஸ்த்து,
2.தீமைக்கு எஜமானன் பிசாசானவன்.
இவ்வுலகத்தில் இருவரும் எஜமான்கள்தான் இது தவிர்க்க முடியாத உண்மை.

இன்றைக்கு நம்மில் அநேகர் இந்த இரண்டு எஜமான்களுக்கும் ஊழியஞ் செய்கிறவர்களாக காணப்படுகிறோம்.

உலக சிற்றின்பங்களும் வேண்டும்

இயேசு கிறிஸ்துவின் அன்பு, இரக்கம், ஆசிர்வாதம் வேண்டும்

என்று இருபுறமாக தம் மனதை கொடுத்து நேரங்களையும் செலவழித்து வருகிேறாம் "நியாதிபதிகள்" புத்தகத்திலே ஒரு நபர் இப்படியாக இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்தான். அவர்தான் "சிம்சோன்".

சிம்சோன் கர்த்தருக்கு பிரியமானவனாகவும் விஷேசித்த திறமையுள்ளவனாகவும் காணப்பட்டான். அவன் தேவனை நோக்கி கூப்பிடும் வேளையெல்லாம் தேவன் அவனுக்கு செவிகொடுத்தார். அனால் சிம்சோன் தன் வாழ்க்கையில் சிற்றின்ப பிரியனாக ஆண்டவருடைய திட்டத்திற்கு ஒப்புக் கொடுக்காதபடி பிசாசானவன் காட்டும் பாதையில் தன் வழியை தெரிந்து கொண்டான்.

"சிம்சோன் தன் தகப்பனை நோக்கி: அவள் என் கண்ணுக்குப் பிரியமானவள், அவளையே எனக்குக் கொள்ளவேண்டும் என்றான்". (நியாயாதிபதிகள் 14:3)

ஆண்டவரோடு சஞ்சரித்த சிம்சோன் இப்பொழுது தன் இருதயத்தை உலகப் பாவங்களுக்கும், சிற்றின்பங்களுக்கும் திரும்பி தேவனுக்கு பிரியமில்லாத காரியத்தை அவன் செய்தான். முடிவிலே என்ன நடந்தது. தனது இரண்டு கண்களையும் பரிகொடுத்தவனாய் மறித்து போனான்.

இன்றைக்கும் கூட அநேக வாலிப சகோதர, சகோதரிகள் இப்படியாக ஆண்டவரை நோக்கி போகாதபடி அனுதினமும் வேதவாசிப்பு, ஜெபம் செய்தாலும் உலகப் பிகாரமான காரியங்களில் சிக்குண்டு தனது ஆசிர்வாதங்களை இழுந்து போய் விடுகின்றனர்.

அனால் ஒன்றை மாத்திரம் நினைத்துக் கொள். கர்த்தர் சொல்கிறார். "ஸ்திரியானவள் தன் கர்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை" (ஏசாயா 49:15)

நீங்கள் ஆண்டவரை விட்டு விலகிச் சென்றாலும் அவர் உங்களை மறப்பதில்லை.
சிம்சோன் ஆண்டவருக்குப் பிரியமில்லாத காரியம் செய்தாலும் பெலிஸ்தர் தூண்களிலே அவன் கைகளை கட்டி வைத்த போது ஆண்டவரைப் பார்த்து வேண்டினான்.தூண்கள் சரிந்து விழுந்து கட்டிடம் தகர்ந்து அனைவரும் மாண்டு போனார்கள்.

அன்பான சகோதரனே, சகோதரியே இப்படியாக "ஆற்றிலே ஒரு கால், சேற்றிலே ஒரு கால்" நீங்கள் வைத்திருந்தாலும் தேவன் உங்களை தன் பக்கமாக வைத்திருந்தாலும் தேவன் உங்களை தன் பக்கமாக வைத்துக் கொள்ள அநேக காரியங்களை நம்முடைய வாழ்க்கையில் அனுமதிக்கிறார். ஏனென்றால் தகப்பன் தன் பிள்ளைகள் தவறான வழியில் செல்லும் போது ஆண்டவரும் நம்முடைய பரம தகப்பனாகிய இயேசு கிறிஸ்து ஒரு சில சிட்சையை நம்முடைய வாழ்வில் அனுமதிக்கிறார். ஆனால் எல்லாம் நன்மைக்காகத் தான் இருக்கும் பிரியமானவர்களே!
சாலமோன் செல்கிறார்,
"என் மகனே கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவர் கடிந்து கொள்ளும் போது சோர்ந்து போகாதே"

"தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறது போல, கர்த்தரும் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார்" (நீதி 3:11,12)
எனவே எப்பொழுதோ ஏற போகும் இரயிலுக்கு இப்பொழுதே டிக்கெட் எடுத்து காத்திருக்காதபடி, அவருடைய வேளைக்காக காத்திருப்போம். ஆமென்.

வாலிபம் இயேசுவுக்கே!!!

திருச்சபை வாலிபர் குழு

## பெண்களின் சிறப்பு

அன்பான சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்த்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இப்போதும் வேதாகமத்தில் இருந்து சில பெண்களின் சிறப்புகளை காண்போம்.

## யாகேல்: ஆசீர்வதிக்கப்பட்டவளின் கூடாரம்

பகைஞன் அழிக்கப்பட்ட கூடாரம் . யாகேல், கேனியனான ஏபேரின் மனைவி, அவள் கூடாரத்தில் குடியிருந்தாள். அவளைக் குறித்து வேதம் இப்படியாக கூறுகிறது.

"ஸ்திரிகளுக்குள்ளே கேனியனான ஏபேரின் மனைவியாகிய யாகேல் ஆசீர்வதிக்கப்பட்டவள், கூடாரத்தில் வாசமாயிருக்கிற ஸ்த்ரிகளுக்குள்ளே அவள் ஆசீர்வதிக்கப்பட்டவள்" (நியா 5:24)

மேரோசும், அதின் குடிகளும் கர்த்தர் பட்சத்தில் துணை நிற்க வரவில்லை. ஆனால் யாகேல், கர்த்தருக்காகவும், அவளுடைய ஜனத்துக்காகவும், மிகவும் செயல்பட்டாள்.

தெபொராள் இஸ்ரவேலை நியாயம் விசாரித்துக் கொண்டிருந்த நாட்களில் கானானியரின் ராஜாவாகிய யாபீனின் கையிலே கர்த்தர் அவர்களை விற்றுப்போட்டார். அவனுடைய சேனாபதி சிசெரா என்பவன் இஸ்ரவேல் ஜனங்களை 20 வருட கொடுமையாய் ஒடுக்கினான். இஸ்ரவேல் மக்கள் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். நியா (4:1-4). தெபொராளும் பாராக் என்பவனும் சிசெராவின் சேனைகளெல்லாம் பட்டயத்தில் வெட்டப்பட்ட படியால் சிசெரா கால் நடையாக யாகேலின் கூடாரத்தில் வந்து சேர்ந்தான்.ஏனென்றால் கானானின் ராஜா யாபீனுக்கும், கேனானியனான ஏபேரின் விட்டுக்கும் சமாதானம் உண்டாயிருந்தது.

தேவ பிள்ளைகளே தேவ ஜனத்துக்கு விரோதமாக, சபைக்கு விரோதமாக எழும்புகிற சத்துருவை இனம் கண்டு, அவனை அழிக்க வேண்டும்.

## யாகேலின் கூடாரம் எப்படி இருந்தது:

பிசாசின் கிரியைகளையெல்லாம் அழித்து நிர்முலமாக்குகிற இடம். நம்முடைய கூடாரம் எப்படியுள்ளது ? இருள் சூழ்ந்திருக்கிறதா ? பிசாசு நடமாடுகிறானா ? பாவத்துக்கு ஒத்து போகிற இடமா ?
பவுல் அப்போஸ்தலர் "பிசாசுக்கு இடங்கொடாமல் இருங்கள்" எபே-4:27

நம்முடைய வீட்டிலும் பிசாசு தந்திரமாகி உள்ளே நுழைந்து விடுவான். குடும்ப நபர்கள் மூலம், சிநேகிதர் மூலம், மிகவும் பிரியமானவர்கள் மூலம் இன்னும் பல ரூபத்தில் வருவான்.

நம் கூடாரம் ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்ட யாகேலின் கூடாரம் போலிருப்பதாக. கூடாரத்துக்குள்ளே நுழைந்து சிசெராவை கொன்று அழித்து
யாகேலைப் போல் நம் கூடாரத்துக்குள் வருகிற சத்துருவை அழித்து ஜெயமெடுப்போம்.

## அத்சாள்: அடங்கி கீழ்படிந்து தயை பெற்றாள்.

எஸ்தர் 2:7 அத்சாள் மறுபெயர் எஸ்தர். எஸ்தர் ரூபவதியும், சௌந்தரியமுடையவளுமாயிருந்தாள். "ராஜா ராஜஸ்திரியாகிய எஸ்தர் முற்றத்தில் நிற்கிறதைக் கண்டபோது, அவளுக்கு அவன் கண்களில் தயை கிடைத்ததினால், ராஜா தன் கையிலிருக்கிற பொற்கோலை எஸ்தரிடத்திற்கு நீட்டினான். அப்போது எஸ்தர் கிட்ட வந்து செங்கோலின் நுனியை தொட்டாள்" எஸ்தர் 5:2.

இந்த வசனம் சொல்லிதருகிற பாடம் என்னவென்றால் ஜெபிக்கிறவனுக்கு தேவனிடத்தில் இருந்தும் மனுஷரிடத்தில் இருந்தும் தயை கிடைக்கும். அத்சாள் என்னும் எஸ்தர் இராஜவினிடத்திற்கு போவதற்கு முன்பு மூன்று நாள், தன் தாதிமார்களோடு, அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, உபவாசம் செய்தாள் (எஸ்தர் 4:16). நாமும் உபவாசித்து ஜெபிப்போம். அத்சாள் என்கிற எஸ்தரைப் போல் உபவாசித்து ஜெபம் செய்து ஜெயம் பெறுவோம்.

## ரெபெக்காள்: உத்தம மணவாட்டி

ரெபெக்காள் என்றால் "அழகான இளம் பெண்" என்று அர்த்தம். அவள் சீரிய தேசத்தானாகிய பெத்துவேலின் குமாரத்தி; லாபானின் சகோதரி; ஆபிரகாமின் சகோதரனாகிய நாகோரின் பேத்தி; மகா ரூபவதி; கன்னிகை அவள் எலெயாசர் கேட்டவுடன் மனமுவந்து சீக்கிரமாய் அவனுக்கு தண்ணீர் கொடுத்தாள். அத்துடன், பல மைல்கள் கடந்து வந்த 10 பாலைவனக் கப்பல்கள் எனப்படும் ஒட்டகங்களுக்கு தண்ணீர் இறைக்க முன் வந்தாள். அவளது உற்சாகம், குறிப்பறிந்து உதவுதல், சுறுசுறுப்பு, கடின உழைப்பு, பெரியோர்களை மதிக்கும் பண்பு இவைகள் இதில் வெளிப்படுகிறது. இவைகள் அவைகளுக்குப் பல பொன் ஆபரணங்களைப் பெற்று தந்ததோடு செல்வ சீமானாகிய ஈசாக்குக்கு மனைவியாகும் நிலைக்கும் கொண்டு வந்தது.

பரம ராஜாவின் மணவாட்டியாக அழைக்கப்பட்ட நாமும் கூட இப்படிப்பட்ட குண நலன்கள் உடையவர்களாயிருக்க வேண்டும். நன்மை செய்யும்படி திராணி இருக்கும்போது அதை செய்யத் தக்கவர்களுக்குச் செய்ய வேண்டும் (நீதி 3:27). குணசாலியின் கைகள் உற்சாகமாக வேலை செய்யும்.

பெண்களாகிய நமக்கு என்ன தனிச்சிறப்பு உண்டு என்பதை ஆராய்வோம். கர்த்தருக்குள் கிறிஸ்துவுக்குள் பெலப்படுவோம்.

சகோதரி.டெய்ஸி எபினேசர்.

# கடந்த மாத நிகழ்வுகளில் தங்கள் பார்வைக்கு சில

















## செயற்குழு உறுப்பினர்கள்


சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்

66021072

செயலாளர் – சகோ. ஆரோக்கியதாஸ்

99870126

பொருளாளர்- சகோ. எபநேசர்

23922058 - 50203472

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . பியூலா ஜெகநாதன்

60797360

வாலிப ஐக்கிய தலைவர் –

சகோ. ஆரோக்கியராஜ்

66159784

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait


தங்களுக்கு வாகன வசதி தேவைபடும்

பட்சத்தில் நீங்கள்

சகோதரர் ஜான்ஸன் அவர்களை தொடர்பு கொள்ளும்படி

கேட்டுக் கொள்ள படுகிறோம்

அவரது தொலை பேசி எண்

97610275

Private Circulation only